# தாய்மொழியைக் கொண்டாடுவோம்!

உலகத் தாய்மொழித் தினத்தையொட்டி 03.03.2020 அன்று காலை 9.30 மணியளவில் எங்கள் கல்லூரி வளாகத்தில் உள்ள கருத்தரங்கக் கூடத்தில் தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அமெரிக்காவின் உலக அமைதிப் பல்கலைக்கழகம் வழங்கிய விருதை ஏற்ற தன்னம்பிக்கை பயிற்றுநர் விருதாளரும், வழக்கறிஞருமான கி. அருண் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தாய்மொழியின் சிறப்பை உணர்த்தினார்.

நகைச்சுவை பாணியில் அமைந்த அவரின் பேச்சு மாணவர்களை வெகுவாகக் கவர்ந்தது. மொழியின் பயன்பாட்டைச் சிலாகித்துப் பேசிய அவர் நிறைவாக மாணவர்களுக்குத் தோன்றிய சந்தேகங்களையும் தீர்த்து வைத்தார். நிகழ்ச்சியில் தமிழ் கற்கும் மாணவர்களும், அடிப்படைத் தமிழ் பயிலும் மாணவர்களும் கலந்து கொண்டனர் என்பது கூடுதல் செய்தி.

சென்னை வானொலி நிலைய பன்பலை வரிசையின் தொகுப்பாளரும், இலக்கியக் கூடல் அமைப்பின் செயலாளருமான கோ. மணி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக இருந்ததுடன் சிறப்பு விருந்தினரைச் நல்ல முறையில் அறிமுகப்படுத்தினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சி.ஆர். மஞ்சுளாவின் வரவேற்புரையும், மாணவர்கள் வழங்கிய நன்றியுரையும் மேலும் மெருகூட்டின.

நிகழ்ச்சியின் நிறைவில் சிறப்பு விருந்தினர் கி. அருணுக்கு ‘கலைச்சுடர் விருது’ வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.